# தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர்,

## திருப்பத்தூர் மாவட்டம் – 635601




# தமிழ்த்துறை

## “புதிய அவையம்” UGC CARE Listed Journal

*அன்புடையீர்,*

*வணக்கம். புனிதர் தொன்போஸ்கோவின் அடியொற்றிய சலேசிய அருட்தந்தையர்களால் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாகத் திருப்பத்தூரில் கல்விச் சேவை புரிந்து வரும் உயர்கல்வி நிறுவனம், தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) ஆகும். கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் 2017ஆம் ஆண்டு ஆய்விதழான **‘புதிய அவையம்’** மின்னிதழாகத் தொடங்கப்பட்டது. ISSN :* 2456-821X *எனும் எண் கொண்ட இவ்விதழானது உள் மற்றும் வெளிப்புற மதிப்பீட்டு வல்லுநர்களின் வழிகாட்டுதலில் இயங்குகிறது. மாநில, இந்திய, பன்னாட்டு அளவிலான மதிப்புறு வல்லுநர்களைக் கொண்ட ஆசிரியர் குழுவும்* (External Editorial Board), *பாட வல்லுநர்களைக் கொண்ட குழுவும்* (Subject Experts) *கட்டுரைகளை மதிப்பிட, தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளைப் புதிய அவையம் வெளியிடுகிறது. முற்றிலும் இணையவழித் தொழில்நுட்பத்தில் இவ்விதழ் செயல்படுகிறது. இந்த ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழுவின் தெரிவு செய்யப்பெற்ற ஆய்விதழ்கள் பட்டியலில்* **(UGC CARE LISTED JOURNAL - 2023)** *புதிய அவையம் இடம்பெற்றுள்ளது. தமிழ்நாட்டு உயர்கல்வி நிறுவனங்கள் வெளியிடும் ஆய்விதழ் ஒன்று பல்கலைக்கழக மானியக்குழுவின் தெரிவுப் பட்டியலில் இடம்பெற்றிருப்பது பெருமைக்குரியதாகும்.*

- *‘புதிய அவையம்’ அடுத்த வெளியீடு **2023, ஆகஸ்ட் மாதம்** வெளியிடப்படவிருக்கிறது.*
- *இவ்விதழுக்கான கட்டுரைகளை 01.06.2023 முதல் 01.07.2023 வரை எமது இணையப் பக்கத்தில் பதிவேற்றலாம்.*
- *பதிவேற்றம் செய்யப்பெற்ற கட்டுரைகள், மதிப்பீட்டுக் குழுவினரின் பரிந்துரைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும். **ஏற்கப்பட்டது / திருத்தி வெளியிடலாம் / ஏற்கப்படவில்லை** என்ற மூவகைப் பரிந்துரைகளை மதிப்பீட்டாளர்கள் வழங்குவர். கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்ட விவரம் கட்டுரையாளர்கள் வழங்கியுள்ள புலன எண்ணுக்கு* (WHAT’S APP) *தெரிவிக்கப்படும்.*
- ***தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் மட்டும் பதிப்புக் கட்டணமாக ரூ.1500ஐ கல்லூரியின் வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும்.***
- ***கட்டுரை தெரிவு செய்யப்பட்ட விபரம் கிடைத்த பிறகே பதிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்.***
- *வெளியிடப்படும் இதழின் அச்சு வடிவமும் சான்றிதழும் கட்டுரையாளர்களுக்கு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.*
- *இந்த அறிவிப்பு உள்ளிட்ட தொடர் அறிவிப்புகளை எமது கல்லூரியின் இணையதளமான* www.shctpt.edu *என்ற பக்கத்தில்* EVENTS *என்ற பகுதியில் தெரிந்து கொள்ளலாம்.*
- *01.07.2023க்குப் பிறகு பதிவேற்றம் செய்யப்படும் கட்டுரைகள் உறுதியாக ஏற்கப்பட மாட்டாது.*

- தரமான ஆய்வுக் கட்டுரைகளே போதுமானது; எவ்விதமான பரிந்துரைகளும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒருவர் ஒரு ஆய்வுக்கட்டுரை மட்டுமே பதிவேற்ற வேண்டும்.
- கட்டுரைகள் பதிவேற்றிய பின்னும், தெரிவுப் பட்டியல் வெளியிட்ட பின்னும் இதழ் வெளிவரும் வரை, புலன வழித் தொடர்பு (WhatsApp) மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். குரல் வழி அழைப்பைத் தயவுகூர்ந்து தவிர்க்க வேண்டுகிறோம்.
- கட்டுரைகள் அமைய வேண்டிய நெறிமுறைகள், பதிவேற்றும் முறைகள், கல்லூரி இணையதள முகவரி உள்ளிட்ட தகவல்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள இணைப்பைச் சொடுக்கி (Link) முழு விவரங்களையும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

தமிழியல் ஆய்வை உலகத் தரத்திற்கு எடுத்துச் செல்வோம்!

வாருங்கள்! இணைந்து செயலாற்றுவோம்!!

**கட்டுரை வடிவமைப்பு குறித்து மேலும் அறிந்துகொள்ள**...

**http://www.shcpub.edu.in/tamil_guidelines/**

என்ற இணைப்பைச் சொடுக்கவும்.

**ஆய்வுக்கட்டுரைகளை எவ்வாறு பதிவேற்றுவது என அறிந்துகொள்ள**

**https://www.youtube.com/watch?v=_bu-ZiGLg0Y**

என்ற இணைப்பில் உள்ள வழிகாட்டுக் காணொளியைப் பின்பற்றவும்.

**கல்லூரி இணையதளத்தைக் காண** -

**http://www.shctpt.edu/**

**Scan this Code & get web link**

Editor in Chief

Dr K. PARTHIBARAJA

Rev. Dr D. MARIA ANTONY RAJ SDB

**Principal,**
Sacred Heart College,
(Autonomous)
Tirupattur-635 601. Vellore Dt